4. யூகத்தின் அடிப்படையில் எடுக்கபடாத நடவடிக்கையால் எனது உரிமையை இழந்துள்ளேன். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட தகவல்களுக்கு ந.க.எண் - 94-03-அ1 நாள் 3.5.07 கடிதம் மூலமாக அளித்துள்ள தகவல்.

கேள்வி: last come should first go என்ற பணி பாதுகாப்பு கோட்பாட்டின்படி எனக்கு பின் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகத்தில் பணியில் சேர்ந்தவரை விடுவிக்கச்செய்து எனக்கு மாற்றுப்பணி வழங்கப்பட்டிருக்க வேண்டும். STED திட்டம் நிறைவுற்றதால் என்னை இத்திட்டத்திலிருந்து விடுவிக்க முடிவெடுத்தப்பின் அல்லது விடுவித்த உடனேயாவது எனக்குப்பின் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகத்தில் பணியில் சேர்ந்தவரை அயல் பணியில் இருந்து திரும்பப்பெற்று எனக்கு அத்துறையில் மாற்றுப்பணி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். என்னை STED திட்ட பணியிலிருந்து விடுவிக்க மாவட்ட ஆட்சியரிடமிருந்து ஆணை பெற தயாரிக்கப்பட்ட அலுவலக குறிப்பில் எனக்குப்பின் பணியில் சேர்ந்தவர் அயல்பணியில் இருக்கும் விவரம் குறிப்பிடப்பட்டதா?

பதில்: வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தில் இருந்து இளையவரை திரும்ப அழைத்து அவரை பணி நீக்கம் செய்தாலும் மனுதாரரை வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தில் எடுத்துக்கொள்ள சம்மதித்தால் மட்டமே இவரை அந்த இடத்தில் நியமிக்கக முடியும் என்ற நிலை இருந்ததால் இவரை அத்துறைக்கு கழகமே மாற்றி ஆணை பிறப்பிக்க இயலவில்லை.

(கேட்கப்பட்ட தகவலுக்கு அளித்துள்ள பதில் 1.STED திட்ட பணியிலிருந்து விடுவிக்க மாவட்ட ஆட்சியரிடமிருந்து ஆணை பெற தயாரிக்கப்பட்ட அலுவலக குறிப்பில் எனக்குப்பின் பணியில் சேர்ந்தவர் அயல்பணியில் இருக்கும் விவரம் குறிப்பிடப்படவில்லை என்பதை உணர்த்துகிறது. 2. மனுதாரரை வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தில் எடுத்துக்கொள்ள சம்மதித்தால் மட்டமே இவரை அந்த இடத்தில் நியமிக்க முடியும் என்ற நிலை இருந்ததால்.....என்று குறிப்பிட்டிருப்பது எனக்குப்பின் பணியில் சேர்ந்த ஜூனியரை விடுவிக்க எடுக்கப்படாத நடவடிக்கைக்கு அளிக்கப்படும் சமாளிப்பு. அல்லது சம்மந்தப்பட்ட துறை ஜூனியரை விடுவிக்குமா என்று யூகத்தின் அடிப்படையில் ஜூனியரை விடுவிக்க கடிதம் அனுப்பாமல் இருந்திருந்தாலும் அந்த நடவடிக்கை நியாயமானதில்லை. பாரபட்சமானதாகவும், ,உள் நோக்கம் கொண்டதாகவும் கருதுவதற்கு நியாயம் உள்ளது.

கேள்வி: எனக்குப்பின் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகத்தில் பணியில் சேர்ந்தவரை அயல் பணியிலிருந்து திரும்பபெற்று எனக்கு அத்துறையில் மாற்றுப்பணி பெற எனது ஜூனியர் அயல் பணியாற்றிடும் துறைக்கு ஜூனியரை விடுவித்து எனக்கு அப்பணி வழங்கிட 12.03.2003க்குப்பிறகு கடிதம் அனுப்பப்பட்டதா?

பதில்: வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தில் பணி புரியும் ஓர் பணியாளரை மாற்றி வேறு வேறொருவரை அந்தப்பணியிடத்தில் அமர்த்தும் அதிகாரம் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகத்திற்கு இல்லை.

( கேட்டுள்ள தகவலுக்கு சற்றும் பொருத்தமில்லாத தகவலை அளித்துள்ளது தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம். தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகத்திலிருந்து வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தில் அயல் பணியில் உள்ள எனக்கு ஜூனியரை விடுவித்து எனக்கு அப்பணி வழங்கிட 12.03.2003க்குப்பிறகு கடிதம் அனுப்பப்பட்டதா? என்று கேட்டால் அந்தப்பணியிடத்தில் அமர்த்தும் அதிகாரம் தனக்கில்லை என்று முரண்பட்ட தகவலை அளித்துள்ளது தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம்.

ஜூனியரை விடுவிக்கவும் அவ்விடத்தில் எனக்கு பணி வழங்கவும் கடிதத்தை எனது ஜூனியர் அயல் பணியாற்றும் அலுவலகத்திற்கு அனுப்ப தவறிவிட்டு அந்தப்பணியிடத்தில்

அமர்த்தும் அதிகாரம் தனக்கில்லை என்று முரண்பட்ட தகவலை அளித்துள்ளது தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம். ஓர் பணியாளரை மாற்றி வேறு வேறொருவரை அந்தப்பணியிடத்தில் அமர்த்தும் அதிகாரம் பற்றியதல்ல கேள்வி.

ஜூனியரை விடுவிக்கவும் அவ்விடத்தில் எனக்கு பணி வழங்கவும் கடிதத்தை எனது ஜூனியர் அயல் பணியாற்றும் துறைக்கு அனுப்பியிருந்தால் அத்துறை எனது ஜூனியரை விடுவித்து என்னை அப்பணியிலமர்த்தவும் ஆணை வழங்கியிருக்கலாம்.

சீனியர் பணியிடமில்லாமல் இருக்கும்போது ஜூனியர் அயல்பணியில் எத்துறையில் இருந்தாலும் அவரை திரும்பப்பெற நடவடிக்கை எடுப்பது நடைமுறையில் உள்ளது.

ஆனால் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழக நிர்வாகம் இத்தகைய நடவடிக்கையை எடுக்காமல் தவிர்த்துவிட்டு அதனை சமாளிக்க பணி புரியும் ஓர் பணியாளரை மாற்றி வேறு வேறொருவரை அந்தப்பணியிடத்தில் அமர்த்தும் அதிகாரம் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகத்திற்கு இல்லை என்னும் முரண்பட்ட தகவலை அளித்துள்ளது)